# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை - 33

[உறுப்பினர்களுக்கு மட்டும்] பதிவு: 135/83.



அருளாட்சி நாயகி

[இதுவே, இராசராசேசுவரி என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது]

காணிக்கை: ரூ 1-00 வெளியீடு: 26—9—1986

# புரட்சி மயங்கக்கூடாது — 2

—சித்தர் கருவூரர்

நாம் நம்மை மதவாதிகள் என்று ஒப்புக் கொள்கின்றோம் ஆனால் அதே நேரத்தில் 'மிதவாதிகளல்ல' என்பதனை ஒவ்வொரு சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்தி வருகிறோம் நாம். எனவே இந்தியத் துணைக் கண்டத்தில் வாழ்கின்ற எந்த ஓர் அமைப்பும் அல்லது இயக்கமும் நம்மை விரோதிக்கவோ நமக்குத் துரோகம் செய்ய முற்படவோ சில தனி மனிதர்களும் சில சிறுசிறு கும்பல்களும் நம்மை எதிர்த்துப் போராடியே தீரும் என்பது தவிர்க்க முடியாத வரலாற்றுப் பேருண்மை -யாகும். ஆனால் அவர்களும் அவைகளும் இந்த நிலப்பரப்பிலிருந்தே ஒழிக்கப்ப டுவதோடு இந்திய மக்களின் நினைவுகளிலிருந்து அழிக்கப்படுவார்கள்.

'அன்பே சிவம்' 'அமைதியே சக்தி,' 'அழகே முருகன்' 'கனிவே கடவுள்' என்பதே இந்து மதம். நண்பர் பொது நல விரோதிகளுக்கும், துரோகிகளுக்கும் துப்பாக்கி தோட்டக்களால் பதில் சொல்ல வேண்டியதில்லை. ஏனெனில் நம் நாட்டில் குடியாட்சித் தத்துவ அரசு இருக்கிறது. ஆனால் பொதுமக்கள் தங்கள் வாக்குரிமைச் சீட்டுக்களால் பொதுநல விரோதிகளுக்கும் துரோகிகளுக்கும் பதில் சொல்லலாம். ஆனால் யார் ஆட்சி பீடம் ஏறினாலும் அவர்களை சுரண்டல்கார முதலா -ளிகளும் கள்ளச்சந்தைக்கார வணிகர்களும் பாட்டாளிகளின் குருதியைக் குடிக்கும் வட்டிக்கடைக்காரர்களும் ஏழைகளை மென்று தின்று வாழும் குட்டி வணிகர்களும் மிக விரைவில் குள்ளநரிப் போக்கால் ஆட்சியை தங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொண்டுவிடுகின்றார்கள். எனவே இந்தச்சமுதாய நலவிரோதிகளின் குரல்வளையை நெறித்தே ஆக வேண்டியிருக்கிறது அல்லது இந்த சமுதாய நலவிரோதிகளின் குரல்வளையை மட்டுமின்றி, கைகளையும், கால்களையும் முறித்தேயாக வேண்டியிருக் -கின்றது. அந்த வன்முறைப் பொறுப்பை இப்பொன்நாட்டின் பொதுமக்கள் பொறு மையையிழக்கும்போதே ஏற்றிடுவார்கள். அதன் பிறகே இந்நாட்டின் அடித்தளத்தில் மக்கள் கிளர்ந்தெழுந்து அப்படியொரு மாபெரும் கடுமைமிகு கொடூரப் புரட்சியை செய்வதை முன்கூட்டியே தவிர்த்திடவும், தடுத்திடவும் முயலுகின்ற அமைதிவழி புரட்சியாளர்களே நாம்.

எனவேதான் மயிலே! மயிலே! இறகு போடு! என்று கேட்காமல் மயில் ஆடு கின்ற காடுகளுக்கு சென்று உதிர்ந்து கிடக்கின்ற மயில் தோகைகளை சேகரித்துக் கொண்டு வருகின்ற பணியினை செய்கின்றோம் நாம். இதனை சற்று வெளிப்படையாக சொல்ல வேண்டுமென்றால் இன்றைய இந்தியத் துணை கண்டம் 'சமுதாய புரட்சி' என்கின்ற குழந்தையை ஈன்றெடுக்க பிரசவ வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றது. நாமோ அந்த பிரசவத்தை நல்லபடியாக நடத்தி முடித்திட வந்திருக்கும் மருத்துவர் களாவோம் எனவே நாம் பிரசவ வேதனைக்கேற்ப குழந்தை, அறுவை மருத்துவத் தால்தான் பிறக்க வேண்டுமா? (Through surgical delivery), குழந்தை இயற்கை யாகவே பிறந்து விடுமா? (Natural delivery) என்று முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அதாவது நாம் எடுக்கின்ற முடிவுதான் அந்த பிரசவ வேதனைக்கு முடிவைத்தரும்.

தொடரும்

# மாலை வழிபாட்டுச் சாத்திரம்

**(சந்தியா வந்தனம்)**

[மாலை ஒளி வணக்கம்—விளக்கு வழிபாடு]

[அருட்பெருஞ் [சோதி] சுடர் வழிபாடு]

அனாதி சத்தியே! அருளொளியே! அருட்சுடரே! அருட்பெருஞ்சோதியே! நாமாகுக! சுவையாகுக!
ஆதி சத்தியே! அருளொளியே! அருட்சுடரே! அருட்பெருஞ்சோதியே! நாமாகுக! சுவையாகுக!
மூல சத்தியே! அருளொளியே! அருட்சுடரே! அருட்பெருஞ்சோதியே! நாமாகுக! சுவையாகுக!
பராசத்தியே! அருளொளியே! அருட்சுடரே! அருட்பெருஞ்சோதியே! நாமாகுக! சுவையாகுக!
மகாசத்தியே! அருளொளியே! அருட்சுடரே! அருட்பெருஞ்சோதியே! நாமாகுக! சுவையாகுக!
ஏகசத்தியே! அருளொளியே! அருட்சுடரே! அருட்பெருஞ்சோதியே நாமாகுக! சுவையாகுக!
அநேகசத்தியே! அருளொளியே! அருட்சுடரே! அருட்பெருஞ்சோதியே! நாமாகுக! சுவையாகுக!
மோகசத்தியே! அருளொளியே! அருட்சுடரே! அருட்பெருஞ்சோதியே! நாமாகுக! சுவையாகுக!
போகசத்தியே! அருளொளியே! அருட்சுடரே! அருட்பெருஞ்சோதியே! நாமாகுக! சுவையாகுக!
நாதசத்தியே! அருளொளியே! அருட்சுடரே! அருட்பெருஞ்சோதியே! நாமாகுக! சுவையாகுக!
விந்துசத்தியே! அருளொளியே! அருட்சுடரே! அருட்பெருஞ்சோதியே! நாமாகுக! சுவையாகுக!
சிவசத்தியே! அருளொளியே! அருட்சுடரே! அருட்பெருஞ்சோதியே! நாமாகுக! சுவையாகுக!

காளி நீயே, சோதியே! காத்திடுக!
மாரி நீயே, சோதியே! காத்திடுக!
மலைமகள் நீயே, சோதியே! காத்திடுக!
அலைமகள் நீயே, சோதியே! காத்திடுக!
கலைமகள் நீயே, சோதியே! காத்திடுக!
நிலமகள் நீயே, சோதியே! காத்திடுக!
காற்று மகள் நீயே, சோதியே! காத்திடுக!
வான் மகள் நீயே, சோதியே! காத்திடுக!
தாயே! தலைவியே! தேவ தேவியே! காத்திடுக!

ஓம் சத்தி ஓம்! ஓம் சத்தி ஓம்! ஓம் சத்தி ஓம்! ஓம் சத்தி ஓம்!

ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி! ஓம்சிவாவாசி! ஓம் சிவாவாசி!
ஓம் சிவவசி! ஓம் சிவவசி! ஓம் சிவவசி! ஓம் சிவவசி!

ஓம் ஓம சோதி ஓம்
ஓம் ஓக சோதி ஓம்
ஓம் யாக சோதி ஓம்
ஓம் யக்ஞ சோதி ஓம்
ஓம் வேள்வி சோதி ஓம்
ஓம் தவ சோதி ஓம்

ஓம் சித்த சோதி ஓம்
ஓம் ஞான சோதி ஓம்
ஓம் பூசை சோதி ஓம்
ஓம் ஏம சோதி ஓம்
ஓம் சோம சோதி ஓம்
ஓம் வாம சோதி ஓம்

ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!

[தொடர்ச்சி 6-ம் பக்கம்]

# கோசலையாற்றங்கரையில் குவலய குரு பீடத்தில் ஒரு இராமகிருட்டிண மடம்

குருமகாசன்னிதானம் ஞாலகுருசித்தர் கருவூரர் அவர்கள், செங்கை மாவட்டம் செங்குன்றத்தை அடுத்து காரனோடை கிராமத்தில் கோசலையாற்றங்கரையில் நிறுவும் குவலய குருபீடத்தில், சித்தர் நெறிக்கருகுலத்தில், 1008- கருவறையார் சிவாலயத்தில், அண்ட பேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானத்தில், பதினெண் வெட்ட வெளிக்கருவறை கொண்ட அருட்கோட்டத்தில், மெய்யான இந்து மதத்தலைமைப் பீடத்தில், சனீசுவரதேவன் கோவிலில்......ஓர் இராமகிருட்டிண மடம் துவக்குகிறார்.

இந்த குவலய குருபீட இராமகிருட்டிண மடம் ஏற்கனவே உள்ள இராம கிருட்டிணமடங்களின் துறவற நெறியை ஏற்காது; கட்டுப்பாடுகள் மிகுந்த செயற்கை நிலைச் சடங்கியல் போக்கைப் பின்பற்றாது; இயந்திர மயமான நிர்வாக முறைகளை கையாளாது; தனிமனித உணர்வுகளுக்கும் திறமைகளுக்கும் உரிய வாய்ப்பு வசதி -களை வழங்காமல் ஒருமித்த மடத்தின் தலைமைப்படியே செயல்படும் நிர்வாக போக்கு இருக்காது; விரும்புகிற வட்டாரங்களிலெல்லாம் அந்தந்த சூழலுக்கும். வசதி வாய்ப்புகளுக்கும் ஏற்பக் கோயில் வழிபாடுகளை ஏற்கும் தன்னுரிமைப்போக்கு வளர்க்கும்; மெய்யான இந்து மதப்படி அனைத்து வகையான கொள்கைகளும் குறிக் கோள்களும், நடைமுறைகளும் பூசா விதிகளும் சடங்கியல்களும் கையாளப்படும்; குறிப்பாக மெய்யான இந்து மதத்திற்குரிய நீராட்டுமுறைகள், குருதிப்பலிகள், பூ அலங்காரம், தேங்காய், பழம், வெற்றிலைபாக்கு......படைத்தல், இறைச்சி உணவு படையல், பலவகை பணியாரங்களும், பலகாரங்களும் படைத்தல், சாம்பிராணி தூபங்களும், கற்பூரத்தீபச் சுடர்களும் பயன்படுத்துதல்......முதலிய குருபாரம் பரிய மரபுகள், குருவாக்குகள், குருவாக்கியங்கள், குருவாசகங்கள், கருவாக்குகள் கருவாக்கியங்கள், கருவாசகங்கள் தருவாக்குகள், தருவாக்கியங்கள். தருவாசகங்கள், திருவாக்குகள், திருவாக்கியங்கள், திருவாசகங்கள் ஆகியவற்றின்படி நிகழ்த்தும்.

இவ்வாறு, காளிதேவியை நேரில் கண்டு அருள் ஊற்றாக மாறிய இராம கிருட்டிணர் அவர்கள், காளிதேவியை பதினெண்சித்தர்களின் மெய்யான இந்து மதப்படி பூசை செய்துதான் சித்தி பெற்றார் என்ற பேருண்மையை விளக்கும் வண் ணமே கோசலையாற்று இராமகிருட்டிண மடத்தில் கருவறையில் அனைத்துவகையான சடங்குகளும் சம்பிறதாயங்களும் கடைபிடிக்கப்படும். பத்தர்கள் கொண்டுவரும் தேங்காய் உடைக்கப்பட்டு ஊதுவத்தி கற்பூரம் ஏற்றபட்டு பழம் வெற்றிலைபாக்கு நெய்வேத்திய பொங்கல், பலகாரங்கள், சமைக்கப்பட்ட பலி உணவுகள்......முதலி யவைகள் படைக்கப்பட்டு பூசைகள் நடக்கும். வருகின்றவர்களுக்கு திருநீறு, குங்குமம், மஞ்சள், சந்தனம், சாந்து.........முதலிய பொருள்கள் வழங்கப்படும். பத்தர்கள் வழங்குகின்ற காணிக்கைகள், நன்கொடைகள், அன்பளிப்புகள், ஏந்துகள் முதலிய அனைத்தும் ஏற்கப்படும். இல்லறத்திற்குப் பிறகு துறவறம் ஏற்கின்ற துறவிகள் இம் மடத்தில் இடம் பெறுவார்கள். இல்லறத்தையே விரும்பாமல் நேரடியாக துறவறம் ஏற்கின்ற துறவிகள் கருகுலப்பயிற்சிகளையும், மதுரை மாவட்டம், மேலூர்-கொட்டாம் பட்டி காரியேந்தல்பட்டி - சித்தர் மாநகரில் அருளுலகப் பயிற்சிகள் பெற்று அருளாள -ராவதற்கு வழிகாட்டப்படுவார்கள்.

இராமகிருட்டிணர் தாந்தரீகப்பூசைகளின் மூலம் அருட்சத்திகளைப் பெற்றூர் என்ற பேருண்மையும்; சுடுகாடுகளிலும், புதைகாடுகளிலும் இரவு பகலாக அமர்ந்து சுடலையாண்டி - ஆண்டிச்சி; சுடலை ஈசுவரன் - ஈசுவரி, சுடலைக்காரன், சுடலைக்காரி, சுடலை முனீசுவரன் முனீசுவரி, சுடலைமாடன் மாடத்தி, சுடலை இடாகினி, இடாகன், சுடலை மோகினி மோகன்.........எனப்படும் 48-வகையான வழிபடு நிலையினர்களிட -மிருந்தும் அருட்சத்தி சித்திகளைப் பெற்றூர் என்றப் பேருண்மையும் அடிப்படையாகக் கொண்டே இராமகிருட்டிண மடத்து அருளுரைகளும், வெளியீடுகளும், பயிற்சிகளும் அமையும்! அமையும்! அமையும்! எனவே, இந்த கோசலையாற்றுச் சித்தர்நெறிக் கருகுலத்தின் இராம கிருட்டிண மடத்தை மற்ற இராமகிருட்டிண மடங்களோடு ஒப்பிட வேண்டாம்.

பதினெண் சித்தர் பீடாதிபதி கோசலையாற்றங்கரையில் அமைக்கும் இராம கிருட்டிண மடத்தில் அனைத்து வித மொழிகளும் பூசாமொழிகளாக ஏற்கப்படும். சமசு கிருத மொழி வற்புறுத்தப்பட மாட்டாது

அதாவது இன்றைக்கு நாட்டு நடப்பில் உள்ள அனைத்து இராம கிருட்டிண மடத்திலும், விவேகானந்தர் கல்வி நிலையங்களிலும் சமசுகிருதத்தை கட்டாயப் பாட மாக்கியிருக்கிறூர்கள் சமசுகிருத மொழி தான் தெய்வீக மொழி என்ற மாயையை ஏற்படுத்தி வருகிறூர்கள். இவற்றிற்கு மாருக அவரவர் தத்தம் தாய் மொழியில் பூசைகள் செய்யலாம் என்ற கருத்து வலியுறுத்தப்படும், செயலாக்கப்படும்.

இன்றுள்ள இராமகிருட்டிண மடங்களில் இராமகிருட்டிண பரம அம்சரின் வரலாறு, வாழ்வியல், சாதனை, போதனை...... முதலியவைகளுக்கு முதலிடம் கொடுக்கப் படுவதில்லை. ஆனுல் சமசுக்கிருத வேதங்களுக்கும், உபநிடதங்களுக்கும், அத்வைத தத்துவத்துக்கும் மட்டுமே முதன்மை கொடுக்கப் படுகிறது. இத்தவறு அகற்றப்படும். இராம கிருட்டிணரின் போக்கிலே அனைத்து வகையான கடவுள் களும், தெய்வங்களும், ஆண்டவர்களும், தேவியர்களும் சமாது நிலை எய்திய அமரர்களும்...பூசை **[48-வகை வழிபடு நிலையினர்களும், வழிபாட்டுநிலை -யங்களும் வெட்டவெளிக் கருவறைகளும்]** செய்யப்படுவார்கள்! செய்யப்படு -வார்கள்! செய்யப்படுவார்கள்! அதாவது, பதினெண்சித்தர்களின் மெய்யான இந்து மதப்படி அனைத்து வகையான விரதங்களும், விழாக்களும், திருநாள்களும், சடங்கு களும், சம்பிறதாயங்களும், அக்னிசட்டி, காவடி, பால்குடம் முதலியவை எடுத்தல், நெருப்பு மிதித்தல்...முதலிய அனைத்து வகையான பழக்க வழக்கங்களும், ஒழுகலாறு -களும் நம்பக்கைகளும் இந்த இராம கிருட்டிண மடத்தின் மூலம் [கோசலையாற்றங் கரையில் உள்ள] மறுமலர்ச்சி அடையவும் வளவளர்ச்சி அடையவும், எழிச்சிமிகு செழிச்சியடையவும் செய்யப்படும்! செய்யப்படும்! செய்யப்படும்!

இன்றைய இந்து மதத் தந்தை ஞானச்சாரியார், குவலய குருபீடம், அரு -ளாட்சி நாயகம், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம் 12-வது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னனிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள், அருள்மிகு, தவத்திரு இராமகிருட்டிண பரம அம்சர் அவர்களை ஞான சித்தர் என்றும், நவநாத சித்தர் என்றும், வேதசித்தர் என்றும் அருளுலக

ஒப்புதலும் தாத்தாக்கள், ஆத்தாக்கள் சம்மதமும் பெற்று அறிவிப்புச் செய்துள்ளார். எனவே, இந்தப் பதினெண்சித்தர் பீடத்திற்குரிய கோசலையாற்றங்கரை இராம கிருட்டிண மடத்தில் அருள்மிகு தவத்திரு இராமகிருட்டிண பரம அம்சர் வழி பாட்டுக்குரிய கருவறை மூலவராக [கடவுள்] அறிவிக்கப்படுகிறார். எனவே, புத்த மதத்தவர் புத்தரை வணங்குவது போல், சமண மதத்தில் மகாவீரரை வணங்குவது போல், கிருத்துவ மதத்தில் ஏசுவை வணங்குவது போல் இனிமேல் இந்த கோசலை -யாற்றங்கரை இராமகிருட்டிண மடத்தில் இராமகிருட்டிண பரம அம்சர் வணங்கப் படுவார். இதனடிப்படையில் இராமகிருட்டிணர் தட்சிணேசுவரத்தில் வணங்கிய காளி கோயிலும் அவர் வாழ்ந்திட்ட இடங்களும் பூசைக்குரிய அருளாற்றல் மிக்க புனிதத் திருத்தலங்களாகக் கருதப்படும். இராமகிருட்டிண பரமஅம்சரின் சிலையை வைத்துப் பூசைகள் செய்யும் மரபு எங்கும் பரப்பப் படுவதற்கு இந்த பதினெண்சித்தர் நெறிக் குரிய கோசலையாற்றங்கரை இராம கிருட்டிண மடம் இனிமேல் பாடுபடும்! பாடுபடும் பாடுபடும்!

எனவே, இராமகிருட்டிணரிடத்தும், விவேகானந்தரிடத்தும், காளி தேவி -யிடத்தும் தாந்தரீக, ஏந்தரீகப் பூசைகளிடத்தும், சுடுகாட்டுப் புதைகாட்டு பூசைகள் சாதிமத வெறியில்லாத சமத்துவப் போக்குகள்; மனிதனைக் கடவுளாக்கும் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமத நடைமுறைகள் முதலியவற்றில் ஆர்வம், நம்பிக்கையும் ஈடுபாடும் உடையவர்கள் நேரடியாகவோ அஞ்சல் வழியாக தொடர்பு கொள்ள கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

---

பின் குறிப்பு;- [3-ம் பக்கத் தொடர்ச்சி]

**இச் சாத்திரத்தைத்தான் பதினெண் சித்தர்கள் ஒளி வணக்கத்துக்காக — ஒளி வழிபாட்டிற்காக படைத்தனர். இச்சாத்திர வாசகங்களை ஆண்கள், பெண்கள் இருபாலரும் கூறி வழிபடலாம். பொதுவாக ஆண்கள் புறத்தே இருப்பதால் அதாவது வீட்டிற்கு வெளியே பகல் பொழுதில் இருப் பதால் காலை சூரிய உதயத்தின் போதோ; மதியம் உச்சியில் இருக்கும் போதோ; மாலையில் சூரியன் மறையும் போதோ இச் சாத்திரத்தைக் கூறி வழிபடலாம். இச்சாத்திரத்தைத்தான் வட ஆரியர்கள் சமசுக் கிருதத்தில் மொழி பெயர்த்துக் கொண்டு 'சந்தியா வந்தனம்' என்கின்றனர். அவர்களின் கூற்றுப்படி பெண்கள் இச்சந்தியா வந்தனத்தைக் கூறக்கூடாது. ஆனால் மெய்யான இந்து மதப்படி; பெண்கள் மேற்கூறிய பொழுதுகளில் சூரியனைப் பார்த்தோ; இல்லையெனில் காலை மாலை வேளை களில் அகல்விளக்கு அல்லது குத்துவிளக்கு ஏற்றியோ இச்சாத்திர வாசகங்களைக் கூறி வழிபடலாம்.**

**— மேற்குறிப்பினையும் சாத்திரத்தையும் வழங்கியுள்ளார். ஞாலகுரு சித்தர் கருவூரார்.**

---

## அறிவிப்பு

**சைவசித்தாந்தத்திற்குரிய இலக்கியங்கள், ஆசிரியர்கள், உரைநடையாசிரியர்கள்........... பற்றிய குறிப்புக்கள் அறிய முடியாமல் கிடக்கின்றன. சைவம் தழைக்க, தமிழ் கூறும் நல்லுலகமோ சைவ சமயம் தழைக்க வைக்கப்பட்ட மடங்களான திருவாடுதுறை, திருப்பனந்தாள், மதுரை, குன்றக்குடி, தருமபுர ஆதினங்களோ எந்த முயற்சியும் எடுப்பதாகத் தெரியவில்லை. இக் குறை யை நிறைவு செய்யும் வண்ணம் பதினெண் சித்தர்களின் இலக்கிய பாரம்பரியத்தில் விரைந்து காணப்படும் குறிப்புகளின் தொகுப்பு அடுத்த இதழிலிருந்து வெளிவருகின்றது.**

# காலடி ஆதிசங்கராச்சாரியாரின் திருவுருவத் தோற்றம்

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

இதனை இந்த இருபதாம் நூற்றாண்டுத் தமிழர், இந்தியாவில் வாழும் பிருமணரல்லாதவர், உலகெங்கும் வாழும் மெய்யான இந்துக்கள் எப்படி ஏற்றும் போற்றிப புரிந்து பயனபடுத்திக் கொண்டாலும் சரியே. ஆனால், மீண்டும் மீண்டும் சேரநாட்டுக் காலடியில் கருணீக்கச் சைவ வேளாள மரபில் சமயக்குரவர் திருஞான சம்பந்தரின் மறுபிறப்பாகத் தோன்றிய 32 வது ஆதிசங்கராச்சாரியார் ஒரு தமிழரே என்ற மெய்யான் கருத்துத்தான் பதினெண்சித்தர்களின் இந்துமதத்தில் புகுந்துள்ள வட ஆரிய மாயை, வேத மத மாயை, சமசுக்கிருத மாயை, பிருமண மாயை, பிருமண ஆபாசக் கற்பனை, பிருமணச் சுரண்டல், பிருமண ஆதிக்கம்... முதலியவைகளால் ஏற்பட்டுள்ள இன்னல் மிகு இருளை அகற்ற முடியும், அகற்ற முடியும், அகற்ற முடியும், என்ற பேருண்மையை மட்டும் வலியுறுத்திக் கொள்ள விரும்புகிறேன் நான் ஏனெனில், இன்றைக்கு ஒரு கணிசமான அளவு தமிழர்கள் தாய் மொழிப்பற்றும் இனப்பற்றும், இனஒற்றுமையும், இனஒருமைப்பாடும் இனவிடுதலையும் மொழியுரிமையும், பண்பாட்டு ஆட்சிமீட்சியும்...தேவையில்லை, தேவையில்லை, தேவையில்லை! என்ற கருத்தைப்பரப்பித் தமிழினத்துரோகிகளையும், விரோதிகளையும் அதிகமாக உருவாக்கி வருகிறார்கள். இந்தச் சுய நல வெறிபிடித்த பேராசைக்கார மானங்கெட்ட பிறவிகளிடமிருந்து மெய்யான இந்துமதத்தைக் காப்பற்றும் பணி தப்பிப் பிழைப்பது எப்படி? எப்படி? எப்படி? எப்பொழுது? எப்பொழுது? எப்பொழுது? என்ற வினாக்களுக்குத் தமிழினத்தின் இளைய தலைமுறையினர்தான் பதிலைக் காண வேண்டும். ஏனெனில் தமிழினத்தின் இளைய தலைமுறையினர் தான் தங்களுடைய உரிமைகளையும், பெருமைகளையும் அந்நியர்களிடமிருந்தும், துரோகிகளிடமிருந்தும், விரோதிகளிடமிருந்தும் மீட்டுத் தரவேண்டும் இதற்கு இந்து மறுமலர்ச்சி இயக்கம் ஒன்றுதான் தலைமை தாங்கி வழிகாட்டிட முடியும்! வழி காட்டிட முடியும்! வழி காட்டிட முடியும்!

திருமாளிகைத் தேவர் கணிசமான அளவு எண்ணிக்கையுள்ள பிருமணர்களை 'பிருமணத் தமிழர்கள்' என்றும், 'தமிழரானவர்கள்' என்ற பெயரில் சித்தரடியான்களாக, சித்தரடியாள்களாக, சித்தரடியார்களாக உருவாக்கினார் இவர்களின் மூலம் இமயம் முதல் குமரிவரையிருந்த, 'பொய்யான ஹிந்து மதத்தின் தலைவர்களாகவும், இயககச் சத்திகளாகவும் விளங்கிய சமசுக்கிருத வெறிபிடித்த பிருமணர்களைத் திருத்தும் பணியில் ஈடுபட்டார். அப்பொழுது, பிருமணர்கள், கருணீக்கச் சைவ வேளாளர் குலததில் தோன்றிய 32- வது ஆதிசங்கராச்சாரியார் பீடமான காலடி ஆதிசஙகராச்சாரியாரைச் சமசுக்கிருத வெறி பிடித்த பிருமணர்கள் சூழ்ச்சியாகத் தங்களுடைய பிருமண குலத்தைச் சார்ந்தவர் என்று கதைகட்டி ஏமாற்றிய விவரங்களைத் தெளிவாகக குறிக்கிறார். அதாவது, திருமாளிகைத்தேவர் மிகுதியாகத் தமது குருபாரம்பரியத்தில் பிருமணர்களின் தவறுகளையும், சூழ்ச்சிகளையும், சுரண்டல்களையும், ஏமாற்றுக்களையும் எண்ணற்ற முறை கடுமையாக விமர்ச்சிக்கும் போது சேரநாட்டுக் காலடியில் சீர்காழியிலிருந்து வந்து குடியேறிய சிவாச்சாரியாரின் மகனாகப் பிறந்த ஆதிசங்கராச்சாரியசர் பற்றி மிகுதியாகச் செய்திகளையும், கருத்துக்களையும் வெளியிடுகிறார்.

(தொடரும்)

# சித்தர் இராமாயணம் - 5

யக்ஞவல்லி எழுதி வைத்துச் சென்றுள்ள குறிப்புக்கள் பயன் மிக்க இறவாப் புகழ் பெற்றதன் மூலம் இவருக்குக் கிடைத்திட்ட புகழ்தான் நிலையான புகழ், பெரும்புகழ். அதுவும் இவர் தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களைக் கடந்து தான் படித்தவைகளையும், தான் பழகியவர்களையும், தான் சாதித்தவைகளையும் கூட்டலோ குறைத்தலோ இல்லாமல் அப்படியே மெய்யான வடிவில் வழங்கியுள்ளார் இதற்காக இவரை குருபாரம்பரியம், மிகவும் பாராட்டுகிறது. இவரைப் பற்றிய செய்திகள் அரச பாரம்பரியத்திலும், இலக்கிய பாரம்பரியத்திலும் மிகுதியாக உள்ளன. அதாவது பதினெண்சித்தர் பீடாதிபதிகளுக்குச் சமமாக இவர் குருபாரம் பரியத்திலும், இலக்கியபாரம்பரியத்திலும் அரசபாரம்பரியத்திலும், இடம் பெறுகிறார், இதுதான் இவருடைய சிறப்பு எனவே, இவருடைய குறிப்புக்களையே 'சித்தர் இராமாயணம்' என்று உரைப்பது முற்றிலும் தகும்.

வண்டமர்குழலி தன் நாட்டிற்குப் படையெடுத்து வந்திருந்த இராமன் தன்னுடைய நாட்டிற்கோ, அல்லது தன்னைப் போன்ற சேர, சோழ, பாண்டிய மன்னர்களுக்கோ வேண்டுகோள் விடுத்து நால்வகைப் படைகளைப் பெற்றுப் போர் புரியாமல் குரங்குகளைப் படையாகத் திரட்டிக் கொண்டு வந்து முறையற்ற முறை -யில் போர்புரிவதாகவும்; கையிலே ஆயுதங்களே இல்லாமல் இருந்த கும்பகர்ணனை நீதியற்ற முறையில் கொன்றும் சூழ்ச்சியாகப் போர்புரிகிறான் என்றும் புகார் செய்து யோகீசுவரரான யக்ஞவல்லிக்கு ஓலை அனுப்பியிருந்தாள். அதன் பேரிலேயே, யக்ஞவல்லி இலங்கைக்கு வந்தார். ஆனால், அவர் வருவதற்கு முன்னமே இராமன் இராவணனைச் சூழ்ச்சியாகக் கொன்று விட்டான். அதாவது, வாட்போரில் வல்ல வனான இராவணனைச் சூழ்ச்சியாக வில்போரினால் 'கொன்றுவிடுகிறான் இராமன். அந்தச் சோக நிகழ்ச்சியை தாங்கமுடியாத, சொல்லமுடியாத வேதனையோடு பலக் குறிப்புக்களால் விளக்குகிறார். அவற்றில் சில குறிப்புக்கள் இங்கு வால்மீகி, துளசி தாசர், போதாயனர், நாரதர் முதலியோரின் இராமாயணச் செய்திகளுக்கு மறுப்பாக இங்கு வழங்கப்படுகின்றன.

இராவணன் சூழ்ச்சியாக இராமனால் வீழ்த்தப்பட்ட உடனேயே வீடணன் தான் மிகப் பெரிய மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிறான், ஆனால் அவன் உடனடியாக இராமனிடம் ஓடி தனது அண்ணன் மனைவி கற்புக்கரசி வண்டமர் குழலி விரைவில் போர்க்களத்திற்கு ஓடிவருவாள் ஆதலால் இராமன் எங்காவது ஓடி ஒளிந்துகொள்ள வேண்டும் என்று கூறுகிறான். வீடணன் பச்சையாகவே, ''யாராலும் வெல்லப்பட முடியாத தன் அண்ணன் இராவணன் "இராமனின் முறையற்ற போரால்தான் கொல்லப்பட்டான் என்பதால் கற்புக்கரசி வண்டமர் குழலியின் சாபம் ஏழுபிறப்புக்க ளுக்கும் தொடரும். அவளுடைய கோபத்தீயால் இராமன் உடனே சுட்டெரிக்கப்பட்டு விடுவான்' என்று கூறுகிறான். இராமனும் பெருவீரனான இராவணனின் அருகில் மண்டியிட்டு வணங்கி மன்னிப்புக் கேட்டு வாழ்த்தையும், அறிவுரைகளையும், அருளுலக நியதிகளையும், தெரிந்து கொள்கிறான். ஆனால் நீதியின் வடிவமாகவும், வீரத்தின் தெய்வமாகவும், அன்பின் உருவமாகவும் வாழ்ந்த இராவணன மிகுந்த பரிவுடன், ''இராமா! என் மனைவி தேவி வண்டமர் குழலி வருவதற்கு முன் நீர் போர்க்களத்தை விட்டே ஓடி எங்காவது ஒளிந்துகொள் நீ என்னை காலை நேரப் போரிலேயே சூழ்ச்சியாக வீழ்த்தி விட்டாய்.


ஆனால் என் மனைவி யாராலும் கொல்லமுடியாது என்ற நம்பிக்கையில் சிவபூசையில் ஈடுபட்டிருக்கிறாள். அவள் சிவபூசையை முடிக்கும் நேரம் வந்துவிட்டது. அவள் கண் திறக்கும் போது நான் வீழ்ந்துவிட்டேன் என்ற செய்திக்குரிய அறிகுறிகள் தெரிந்துவிடும் அவளுக்கு. அதனால் அவள் கோபமாக வரும் போது உன்னைப் பார்த்தாள் என்றால் அவள் கண்பார்வைபட்டே பொசுங்கிப் போவீர்கள் நீயும் உன் -படையும். எனவே அவளுடைய கோபத்திலிருந்து தப்பித்துக்கொள்.

ஆனால் பத்தினியான அவள் சாபத்திலிருந்து நீயோ, உன் மனைவியோ, உன் தம்பிகளோ உன் படையினரோ தப்புவதென்பது முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது! அடுத்த பிறப்பில் நீ யாராகப் பிறந்தாலும் சரி, எந்த யுகத்திலும் பிறந்தாலும் சரி அற்பமானவனின் அம்புக்கு இரையாவாய்; உன்னைச் சார்ந்தவர்களும் அற்பமான சண்டைச் சச்சரவுகளிலேதான் மாண்டு போவார்கள் என்ற சாபத்தைத்தான் என் மனைவி உனக்கும், உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்குவாள் நீ பேடிபோல் மறைந்திருந்து வாலியைக் கொன்றதைவிட, ஆயுதமே கையில் இல்லாமல் இரண்டு கைகளிலும் சுக்கிரீவனைத் தூக்கிக் கொண்டு கோட்டைக்குத் திரும்பிய கும்பகர்ணனை முன்னிரவின் இருளில் மறைந்திருந்து அம்பெய்திக் கொன்றதை விட, நீதியற்ற முறையில், நேர்மையற்ற முறையில் பேடித்தனமாக, சூழ்ச்சியாக அம்பெய்தி வீழ்த்திவிட்டாய் என்னை, எனவே என்மனைவியின் கோபத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் தப்பவே முடியாது நீ அதனால் விரைவில் ஓடி ஒளிந்து கொள்.

என்தம்பி வீடணனையும் அவள் முன்னால் அனுப்பாதே. என் குருதேவர் யக்ஞவல்லியை வரவழைத்து எனக்கு ஈமக்கிரியை செய்துவிடு அறவோனாகிய உன் தந்தைக்கும் அவரை வைத்தே ஈமக்கிரியை செய்துவிடு அனேகமாக எனனைக் கொன்றதினால் பெரும்புகழ்பெற்ற உனக்குக் கூட அவரைவைத்தே ஈமக்கிரியை செய்யும்படி ஏற்பாடு செய்துவிடு. நீதியற்ற, நேர்மையற்ற உண்மையற்ற உன்னை யாருமே மன்னிக்கமாட்டார்கள். இதோ கோட்டையின் காண்டாமணி ஒலிக்கிறது, நான்வீழ்த்தப்பட்ட செய்திகேட்ட என் மனைவி பூசையறையிலிருந்து புறப்பட்டுவிட்டாள் அவள் வரும்போது நான் உயிரோடு இருந்தால் யாராலும் வெல்லப்பட்முடியாத என் வீரத்தை பேடியான உனது சூழ்ச்சி எப்படி வென்றது என்ற உண்மையெல்லாம் அவளுக்குக் கூற வேண்டியிருக்கும். அதனால் உன்னுடைய சூரிய குலத்திற்கே இழிவும், பழியும் வரும். எனவே நான் என் உடலை விடுத்து வெளிப்புறப் படப் போகிறேன், அதன் பிறகு நீ இந்த இலங்கை மண்ணில் பூசை கூடச் செய்ய முடியாது. செய்ய வேண்டாம். எனவே நீ விரைவில் இலங்கையை விட்டு திரும்பிப் பாராமல் மறுகரைக்குச் சென்றதும் சிவபத்தனை என்னைக் கொன்ற பாவத்திற்கு இந்தக் கடலின் மண்ணிலேயே சிவலிங்கம் செய்து சிவபூசை செய்து பாவமன்னிப்பு பெற்றுச் செல். உன் வாக்குறுதிப்படி என் தம்பிக்கு இலங்கை அரசனைக் முடிசூட்டு. ஆனால் நீதி தேவதை வாழும் இலங்கை மாநகருக்குள் நீ மட்டும் போய் விடாதே. பிறகு உன்னை யாராலும் காப்பாற்ற முடியாது இலங்கையின் புனித மண்ணை உன்னால் மிதித்து மீள முடியாது. நீ விரைவில் போய்விடு நான் நிறைவு பெறப் போகிறேன் .....'' என்று இராவணன் கூறியதை இராமன் தன்னிடம் கூறியபடியே எழுதியிருப்பதாக யக்ஞவல்லி குறிப்பிடுகிறார்.

இராமன் மனம் வருந்திக்கூறியதாக; ''.........இலக்குவன் அவசரப்பட்டுப் பெண் என்றும் பாராமல் சூர்ப்பணகையின் மூக்கை அறுத்தான். அதனால் தான் சீதையை இழந்து துன்புற நேரிட்டது இலக்குவன் கும்பகர்ணனுடன் போரிட்டுத் தோற்ற செய்தியை உடனே தெரிவிக்காமல் மூடி மறைத்ததினால் தான் கடைசி நேரத்தில் கோட்டைக்குத் திருமபிக் கொண்டிருந்த கும்பகர்ணனை இருட்டில் துரத்திச் சென்று கொல்ல நேரிட்டது. இலக்குவன் மேகநாதனை எப்படியாவது குறுக்கு வழியில் சூழ்ச்சியாகக் கொன்று தன்னுடைய வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்ததால்தான் குகைக்குள் ஆழ்ந்த பூசையில் ஈடுபட்டிருந்த மேகநாதனை முதுகில் அம்பு போட்டுக் கொன்றதையும் ஏற்க நேரிட்டது. இலக்குவன் இராவணனிடம் தூது போக அஞ்சியதால்தான சரியாகப் பேசவராத குரங்கான அங்கதனை இராவணனிடம் தூதராக அனுப்பி இராவணனுடன் சமாதானம் செய்ய மேற்கொண்ட முயற்சி தோற்றது அதாவது போர் முறைப்படி இராவணன் தன் தங்கையை மானபங்கப்படுத்திய எங்களைப் போருக்குஅழைப்பதற்காகத்தான் சீதையைச் சிறையெடுத்தான். அவனிடம் அவன் தங்கை சூர்ப்பணகையின் அறிவுகெட்ட செயலையும், இலக்கு -வனின் அவசரமான கோபச் செயலையும் விளக்கியுரைத்துச் சமாதானம் பேசியிருந்தால் வண்டமர் குழலியின் கோபத்திற்கும், சாபத்திற்கும் உள்ளாக நேரிட்டிருக்காது. அநியாயமாக இராவணனைக் கொல்லவும் நேரிட்டிருக்காது. இலக்குவனின் வறட்டுப் பிடிவாதமும், வீடணனின் திட்டமிட்ட சதியும் தான் இராவணனுடன் சமாதானம் ஏற்படாமல் செய்துவிட்டன.

[தொடரும்]



# இந்தியாவில் மார்க்சீயம் - 15

—சித்தர்

உலகிலேயே அதிக அளவு நண்பர்களைப் பெற்றுள்ள மனிதன் இவனே, இவன் பெயர் பாட்டாளி வர்க்கத்தின் உயிர் மூச்சு; பணக்காரர்களின் மரண மூச்சு: இவனது சாதனை மானுட சமுதாயத்தின் மேடு பள்ளங்களை எல்லாம் சமப்படுத்தும் மாபெரும் கருவியைக் கண்டு பிடித்ததுதான் இக்கருவி எத்தனை நூற்றாண்டுகளாயினும் கெட்டுப் போகாது. இவன் அமிர்தத்தை உண்டு இறையருட் செல்வனுகவில்லை; ஆனால், இவன் தனது படைப்புகளுக்கு இறவாத தன்மையைக் கொடுத்தான். இதன் மூலம் இறைவனை விஞ்சியப் பேராற்றல் படைத்த இறைவனாகின்றான் இவன்

மார்ச்சு-17இல் அதாவது இறந்த மூன்றும் நாள் மார்க்சு இலண்டனிலிள்ள 'ஐகேட்' புதை காட்டில் அடக்கம் செய்யப் பட்டார். எங்கெல்சு மிக சுருக்கமான ஆனால் உருக்கமான சிறந்ததோர் உரையை நிகழ்த்தினார்.......'மனித குலத்திற்கு ஒரு தலை குறைந்து விட்டது அது நம்து குலத் -தின், காலத்தின் மகத்தான தலையாகும்.........'மார்க்சின் பெயரும் பணியும் காலம் உள்ளவரை நின்று நிலைக்கும்'.........என்று கூறினார்.

மார்க்சின் மறைவைத் தொடர்ந்துதான் எங்கெல்சின் பங்கு பணி அதிகமாகியது எனலாம். அவரை உலகச் சோசலிச இயக்கத் தலைமை மார்க்சின் பணியை முழுமைப்படுத்தத் தூண்டியது. தொடர்ந்து இரண்டாண்டுகள் உழைத்து, 1885 பிப்ரவரியில் மார்க்சின 'மூலதனம்' என்ற நூலின் இரண்டாம பாகம் அச்சிட்டு வெளியிட்டார் மூன்றும் பாகம் நிறைவு செய்யும் பொருட்டும் தொடர்ந்து தொகுப்பில் முனைந்தார். பின்பு அதே ஆண்டு அக்டோபரில் குடும்பம - தனிச் சொத்து – அரசு' ஆகியவற்றின் தோற்றம் என்ற நூலை வெளியிட்டார் டிசம்பரில் சோசல் டெமாக்ராடிக் இயக்கத்திலிருந்த சந்தர்ப்பவாதக் கொள்கையின் தலைவர்களைக் கடுமையாகவும் நேரடியாகவும் எதிர்த்துப் போராடிவந்த 'எலியனோர் மார்க்சு ஏவ்விங்', 'எத்வார்த் ஏவ்விங்' என்ற இருவருக்கும் எங்கெல்சு துணை புரிந்தார். அத்துடன் பிரிட்டன் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் 'செக்டேரியன் போக்கையும்' கடுமையாக எதிர்த்தார். இதன் மூலம் ஒரு 'பொது மக்கள் தொழிலாளி வர்க்க இயக்கம்' தோற்றுவிக்கப்படுவதற்குரிய அடிப்படை முயற்சிகள் மேற் கொள்ளப் பட்டன.

1886 நவம்பர் 26 இல் எங்கல்சு அமெரிக்க சர்வதேச தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முதன்மையானவர்களுள் ஒருவரான பி. அ. சோர்கே அவர்களுக்கு அமெரிக்காவிலுள்ள செர்மன் சோசலிசுட்டுகள் விஞ்ஞானக் கம்யூனிசத்தைப் புரிந்து கொள்ளாமல் வறட்டுப் போக்குடைய கண் மூடித்தனமான சித்தாந்திகளாக வாழ்வதை கடுமையாகக் கண்டித்து கடித வடிவில் ஓர் கட்டுரை எழுதினார். அது உலகச் சிறப்பினைப் பெற்றது இதனையடுத்த ஆண்டிலேயே 1887 சனவரியில எங்கல்சு அமெரிக்காவிலுள்ள சோசலிசுட்டுகளுக்கு அறிவுரை கூறும் வண்ணம் 'இங்கிலாந்தில் தொழிலாள வர்க்கத்தின் நிலைமை' -என்ற தமது நூலின் அமெரிக்க வெளியீட்டுக்கு முகவுரை எழுதினார் அதில் அமெரிக்கத் தொழிலாளி வர்க்கத்தின் நிலைகளை விளக்கி அவர்கள் தொழிலாளி வர்க்கத்திற்கென ஓா அரசியல் இயக்கத்தை துவக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார். மேலும் மேலும் தத்துவததலைவன் காட்டியப் பாதையிலே தொடர்ந்து பல கட்டுரைகளை அயராமல் உலகெங்குமுள்ள தொழிலாளர்களுக்காக அனுப்பிக் கொண்டிருந்தார் 1888 - 1889 மார்க்சு முடிய. எங்கெல்சு, பிரான்சு நாட்டிலுள்ள குறுகிய 'தேச வெறி இயக்கத்தை' எதிர்த்துப் போராடித் தடுக்க வேண்டிய இன்றியமையாமையை விளக்கி "போல்லபார்க்", "லெளராபார்க்" என்னும் இருவருக்கும் இலக்கியச் சிறப்புடைய அஞ்சல்களை எழுதினார். முன்பு 1886 இல் எழுதிய 'புதிய காலம்' (Neue zeit) என்ற பத்திரிக்கையில் வெளி வந்த 'லுக்விக் பாயர்பாகும் செர்மன் தொன்மைத் தத்துவ இயலின் இறுதியும்' என்ற (Ludwig feverback and the end of the classical German philosophy) தொடர்கட்டுரைகளையெல்லாம் தொகுத்து ஒரு தனி நூலாக வெளியிட்டார் 1889 'மே' மாதத்தில்.

நீண்ட நெடிய ஆராய்ச்சிப் பயணத்தால் களைப்புற்ற எங்கல்சு ஓய்விற்காக அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், கனடாவிலும் சுற்றுப் பயணம் செய்திட்டார். அந்நாட்டிலும தொழிலாளி வர்க்கத்திற்குப் புத்துணர்ச்சியும், புதுத் தெம்பும், செயல் முறைத் தெளிவும உண்டாகும் வண்ணம நிறைய கருத்துக்களை வாரி வழங்கினார்.

[தொடரும்]

# அன்புள்ள சேவுகனுக்கு........!

(கடந்த இதழ் தொடர்ச்சி)

அன்புச் சேவுக!

அனாதிகாலத்து, விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மனிதனுக்கு விண்வெளியிலிருந்து வந்திட்ட பதினெண் சித்தர்கள் ஆரம்ப கட்டத்தில் வழங்கிய அதே பயிற்சிகளையும், முயற்சிகளையுமே வழங்குகிறோம் யாம். அதாவது எதையுமே அநாகரீகமானது, உலகியலுக்கு அப்பாற்பட்டது, அச்ச கூச்ச மாச்சரியங்கள் உள்ளது, கடுமையானது, கொடுமையானது .. என்று மறைத்தோ, குறைத்தோ, அஞ்சியோ, கெஞ்சியோ செயல்படுத்தாமல் ஏறத்தாழ அனைத்தையுமே பச்சையாகவும் கொச்சையாகவும் செயல்படுத்தி வருகிறோம் யாம். இதனால் விளைகின்ற நலிவு மெலிவுகளைப் பற்றியோ, சிதைவுஇழப்புக்களைப் பற்றியோ, கவலைப்படாமல் செயல்பட்டு வருகிறோம் யாம். இதுவரை. எனவே தான், யாம், எம்மிடம் ஒரு நொடிப் பொழுது பழகிவிட்டுப் பிரிந்தவர் -களானாலும் சரி; அவர்கள் எம்மை மறக்கவோ, துறக்கவோ முடியாதவர்களாகவே வாழுகின்றார்கள் என்ற சாதனையைச் சாதித்திருக்கிறோம் யாம்.

நண்ப! நம்மவர்களில் சிலர் யாம் அதிகமாகச் சித்துவேலைகளையும், அற்புதங்களையும், மாயங்களையும் செய்தால்தான் நமக்கு விரைந்த, விரிந்த வளர்ச்சி ஏற்படமுடியும் என்று நம்பு கிறார்கள். அப்படிப்பட்ட வளர்ச்சி விரைவில் தோன்றி அழியும் காளானின் வளர்ச்சியைப் போன்ற தேயாகும். மேலும் இயற்கை கடந்த செயல்களைக் கண்டு வியந்து நமக்குச் சேருகின்ற கூட்டம் புற்றீசல்களைப் போல அல்லது பட்டாம்பூச்சிகளைப்போல விரைவில் செயல் ஒடுங்கிப் போய்விடும். இக்கருத்தை, யாம், ஆழமாகவும், வலிமையாகவும் எடுத்துரைப்பதற்குக் காரணம பதினெண் சித்தர்களின் தலைவரான சிவபெருமான்அறுபத்து நான்கு முறைகள் நேரில் தோன்றித் திருவிளையா டல்கள் புரிந்தும், அறுபத்துமூன்று நாயன்மார்களை அனுப்பி அற்புதங்களையும், மாயங்களையும், சித்துக்களையும் செய்துகாட்டியும் கூடத் தமிழ் மொழியின் அருளுலக ஆட்சிநிலை நிலைத்து நிற்க வில்லை! மெய்யான இந்துமதம் நிலையான வாழ்வைப் பெறவில்லை

பதினெண் சித்தர்களின் நேரடி வாரிசான தமிழர்களுக்கிடையில் ஒற்றுமையும், பற்றும், பாசமும், கட்டுப்பாடும், ஒருமைப்பாடும், உரிமை உணர்வும், பண்பாட்டுப் பெருமித உணர்வும நிலை குலையாமல் நிற்க முடியவில்லை. எனவே தான், யாம் சித்தர்களுக்கே உரிய 'சித்துக்கள் அனைத்தையும் தனித்தனியே கடந்த நிலையில் தொடர்ந்து வாழுகிறோம் வாழுகிறோம் வாழு கிறோம், யாம். இம்மண்ணுலகின் மூலத்தத்துவத்தின் முதல்தத்துவத்தின் பாரம்பரிய நாயகமாகத் தோன்றியிருக்கிறோம். எம்மைப் போல் இன்னும் முப்பத்தாறு (36) பேர்கள் தோன்ற இருக்கிறார் கள். எனவே தான், யாம், கூறுவதைக் கூறுவோம் செய்வதைச் செய்வோம் நடப்பது நடக்கட்டும் என்று நிதானமாக, அடக்கமாக பொறுமையாக, பொறுப்பாகச் செயல்பட்டு வருகிறோம்.

நண்ப! யாம் எந்தத் தனிமனிதரையும், உயர்த்தவோ, தாழ்த்தவோ ஒதுக்கவோ, பதுக்க வோ, அடக்கவோ, அடக்காமல் விடவோ, முற்படவில்லை, முற்படவில்லை, முற்படவில்லை, முற்பட வேயில்லை ஏனென்றால், 'கட்டிக் கொடுத்த சோறும் சொல்லிக் கொடுத்த சொல்லும் நெடுநாட் களுக்கு நிலைத்திருக்க மாட்டா' என்ற முதுரையை நம்புகிறவரே யாம் அதாவது யாரும் யாரையும் உயரத்தில் தூக்கி நிறுத்தவோ, அல்லது முதன்மையாக விளம்பரப்படுத்தியோ வளர்த்துவிட முடியாது? வளர்த்துவிட முடியாது! வளர்த்துவிட முடியாது! வளர்த்து விடவேமுடியாது! இதே போல் யாரும் யாரையும் அடக்கியோ, ஒடுக்கியோ மறைத்தோ, குறைத்தோ வளருவதைத் தடுத்துவிட முடியாது? தடுத்துவிட முடியாது! தடுத்துவிட முடியாது தடுத்துவிடவே முடியாது' எனவே நமமவர்கள் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ள நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களையும், கையெ -ழுத்துப் பிரதிகளாக இருக்கின்ற எண்ணற்ற கட்டுரைகளையும், அஞ்சல்களையும், நூல்களையும் தேடிப்படித்துத் தங்கள் தங்களின் விருப்பத்திற்கும், ஆற்றலுக்கேற்பப் பயிற்சி முயற்சிகளைச் செய்து தேர்ச்சிகளைப் பெறுமாறு வேண்டுகோள் விடுத்துக் கொள்கிறோம் யாம்.

தலைவர், குருதேவர், ஞானாச்சாரியார்,

---

தொடர்பு: தலைமைப் பொறுப்பாளர், சி. கவிக்குமார் B Sc.,
56, N G.O காலனி, பொன்னேரி-601204

# புரிந்து கொள்ளவேண்டிய சிந்தனைகள்

(இந்து மறுமலர்ச்சி இயக்க வீரர் சிந்தனைக்கு)
காக்காவழியன் பண்ணையாடி, சித்தர் காகபுசுண்டர்
காக்கையர் ம. பழனிச்சாமி பிள்ளை.

எமது மாமனாரும், இ.ம.இ. யின் முதல் தலைவருமான கண்டப்ப கோட்டைச் சித்தர் ஞானம் பட்டியார் உ. இராமசாமி பிள்ளையிடமிருந்து; இ.ம.இ. யின் பொறுப்புக்களை ஏற்றதும்; யாம், இ.ம.இ. வீரர் சிந்தனைக்கு விடுத்த அழைப்பு வேண்டுகோள் மடல்களுள் ஒன்று இது...

இ.ம.இ. க்கு இமயம் முதல் குமரி வரை உறுப்பினர்களும், ஆதரவாளர்களும், முழுநேரச் செயல் வீரர்களும், அ.வி.தி நிலையங்களும், வழிநடத்தும் அருளாளர்களும் நிறைய இருந்தும்கூட இந்த இயக்கம் உலகறிய வெளிப்பட்டுச் செயல்படாமல் 'இலைமறைகாயாகவே இருநூறு ஆண்டு -களாக இருந்து வருவது ஏன்? மாற்று மதங்களோடு சண்டை சச்சரவோ, போராட்டமோ, போரோ உருவாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் இந்த இலைமறை காய்நிலை என்றால்; அனைத்து மதத்தவர்களையும் அருளை அநுபவப் பொருளாக அடையக் கூடிய 'சீவநெறி' எனும் சித்தர் நெறியை எங்கும் வித்திட்டு வளர்த்திடலாமே!?

இ.ம.இ. யின் சித்தாந்தம், 'சுரண்டலற்ற', ஏற்றத் தாழ்வற்ற', 'ஏழைபணக்கார வேறுபாடற்ற', ,சர்வாதிகாரமற்ற', 'அடிமைநிலையற்ற', ,மிடிமை நிலையற்ற'......சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைப்பதேயாகும். இதற்காகத்தான், மதங்களுக்கிடையில் மறுப்பு வெறுப்போ!; நகை பகையோ!; போட்டி பொறாமையோ!; சண்டை சச்சரவோ!; நேரடிப்போரோ!......நிகழ்ந்திடாமல் தடுத்து நிறுத்தி; 'உலக ஆன்ம நேய ஒருமைப் பாட்டை உருவாக்கும் பணிதான் இ.ம.இ. யின் செயல் சித்தாந்தமாக ஆக்கப்பட்டிருக்கின்றது. இருந்த போதிலும், 'இந்து' என்ற சொல்லால்; இந்த இயக்கம் இந்து மதத்திற்கு மட்டுமே உரியதாகத் தவறாக எண்ணுபவர் அதிகமாக இருக்கிறார்கள். எனவே, 'இந்து' என்ற சொல்; பொதுவாக 'மதம்', 'சமயம்', 'ஆவி', 'ஆன்மா', 'ஆருயிர்', 'மனிதப்பண்பு', 'மனித வாழ்வு 'உண்மை', 'அழகு', 'இனிமை', 'அன்பு', 'நட்பு', 'தோழமை', 'பற்று', 'பாசம்', 'அமைதி' 'அடக்கம்', 'கட்டுப்பாடு', 'கடமை', 'புண்ணியம்', 'கூடிவாழ்தல்', 'பிறர்க்கு கேடு செய்யாமை, ......முதலிய நற்பண்புகளைக் குறிக்கின்றது என்ற பேருண்மையைத் தமிழகத்துக்குள் இருப்பவர் -களுக்குக் கட்டாயமாக அறிவித்தும்; உணர்த்தியும் நடை முறைப்படுத்த வேண்டும்; இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் உணருமாறு செய்யவேண்டும். உலகம் முழுதும் அறியுமாறு செய்ய வேண்டும்.

'ஒவ்வொருவரும் தான் வாழ ஒரு தாழ்வாரத்தையாவது [ஒரு வீட்டின் முன் (அ) பின் பகுதி] சொந்தமாகப் பெற்றிருத்தல் வேண்டும் பிறகு தான், பொதுப்பணியில், அருட்பணியில்......... ஈடுபட வேண்டும்' என்பதுதான் குருபாரம்பரிய வாசகம்.

''தனக்கெனத் தாழ்வாரம் ஒன்றில்லார்க்குத்
தேவாரப் பணி ஏதுக்கடி குதம்பாய்''

[குதம்பேய்ச்சித்தர்]

என்ற குதம்பேய்ச்சித்தர் பாடல் இக் குருபாரம்பரியச் செய்தியினை எளிமையாக விளக்குகின்றது அதாவது, 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' என்றால்; 'உலக மதத்துறையின் மறுமலர்ச்சி இயக்கம்' [The International Religious Renaissance Movement] என்று தான் பொருள் என்பதை அனைவரும் உணருமாறு செய்யவேண்டும், அப்பொழுது தான், உலக அளவில் மொழி விடுதலை, இன விடுதலை பண்பாட்டு விடுதலை, நாகரீக விடுதலை, மத விடுதலை, நாட்டு விடுதலை........ என்பவையெல்லாம் தனித்தன்மையோடும், உரிமையோடும் பேணப்படும். இதன்படியே, முதலில் தமிழ்மொழி விடுதலை தமிழின விடுதலை, தமிழ்ப்பண்பாட்டு விடுதலை...........முதலியவையெல்லாம் உரிமையோடும், பெருமையோடும், வாழ்வு பெற வேண்டும் அப்பொழுதுதான், இ.ம.இ. உலக அளவில் மனித இனத்துக்கு நன்மை செய்யக் கூடிய ஓர் இயக்கமென்பது உணரப்படும், நம்பப்படும்.

(தொடரும்)

KVS பிரிண்டர்ஸ், பொன்னேரி.